**இனிமையான குழந்தைகளே! அறிவுள்ளவர்களாகி உங்களுடைய கணக்கைப் பாருங்கள். எந்த ஒரு கர்ம இந்திரியமும் உங்களை ஏமாற்றவில்லையே? நாள் முழுவதிலும் ஏதாவது தவறு ஏற்பட்டது என்றால், உங்களுக்கு நீங்களே தண்டனை கொடுங்கள்.**

கேள்வி: தந்தையிடம் உண்மையான வியாபாரம் செய்ய அல்லது உயர்ந்த பதவி அடைவதற்கான ஆதாரம் என்ன?

பதில்: தந்தையிடம் உண்மையான வியாபாரம் செய்ய வேண்டுமென்றால், தந்தையின் ஒவ்வொரு டைரக்ஷன் படியும் (உத்தரவு) நடங்கள். குழந்தைகளே ! உயர்ந்த பதவி அடைய வேண்டுமென்றால், உள்ளுக்குள் இருக்கும் தீய பழக்கங்கள் அனைத்தையும் நீக்கி விடுங்கள் என்று பாபா கூறுகிறார். தீய பார்வை, கோபம் ஆகியவற்றால் மிகுந்த தீமை ஏற்படுகிறது. எனவே தந்தை புரிய வைத்திருக் கும் கர்மம், அகர்மம், விகர்மத்தின் ஆழமான விளைவை புத்தியிலிருத்துங்கள்.

ஓம் சாந்தி. குழந்தைகளே! (ஆத்ம அபிமானி) ஆத்ம உணர்வுடையவர்களாகி அமர்ந்துள்ளீர்களா? ஒவ்வொரு விஷயத்தையும் நம்மிடமே நாம் கேட்க வேண்டியுள்ளது. நான் ஆத்ம அபிமானியாகி அமர்ந்துள்ளேனா? என்று உங்களிடமே நீங்கள் கேளுங்கள் என்று பாபா யுக்தி (வழிமுறை) கூறுகிறார். தந்தையை நினைவு செய்து கொண்டிருக்கிறேனா? இது உங்களுடைய சேனையாகும். அந்த சேனையில் வாலிபர்கள் மட்டுமே இருப்பார்கள். உங்களுடைய இந்த சேனையில் வயோதிகர்கள், இளைஞர்கள், குழந்தைகள் ஆகிய எல்லோருமே இருக்கிறார்கள். 80-90 வருடங் கள் வயதுடைய முதியவர்களும் இருக்கிறார்கள். இது மாயை மீது வெற்றி அடைவதற் கான சேனையாகும். ஒவ்வொருவரும் மாயை மீது வெற்றி அடைந்து தந்தையிடமிருந்து எல்லை யில்லாத ஆஸ்தியைப் பெற வேண்டும். மாயை மிகவும் வலிமை வாய்ந்தது. மிகவும் பிரபல மானது. நிறைய புயல்களை எடுத்து வருகிறது. ஒவ்வொரு கர்ம இந்திரியமும் ஏமாற்றுகிறது. எல்லாவற்றையும் விட அதிகமாக ஏமாற்றக் கூடிய கர்ம இந்திரியம் எது? கண்கள் எல்லாவற்றை யும் விட அதிகமாக ஏமாற்றுகிறது. கணவன் மனைவியாக இருந்தாலும் கூட நாம் பி.கே. ஆவோம் என்று புத்தி மூலமாக உணருங்கள் என்று குழந்தை களுக்குப் புரிய வைக்கப்படுகிறது. இல்லை யென்றால் கண்கள் மிகவுமே ஏமாற்றும். நாள் முழுவதிலும் என்னை எந்த கர்ம இந்திரியம் ஏமாற்றியது என்பதை சார்ட்டில் எழுத வேண்டும். கண்கள் முதல் நம்பரில் ஏமாற்றக் கூடியதாகும். கண்கள் மிகுந்த தீமை ஏற்படுத்துகின்றன. சூர்தாஸின் உதாரணம், கண்கள் என்னை ஏமாற்றுகிறது என்று நினைத்தார். எனவே கண்களையே எடுத்து விட்டார். குழந்தைகள் சேவை மிகவும் நன்றாக செய்கிறார்கள் என்றாலும் கூட மாயையும் குறைந்தது அல்ல. கண்கள் மிகவும் ஏமாற்றுகின்றன. மேலும் ஒரேயடியாக பதவியை மோசமானதாக ஆக்கி விடுகிறது. அறிவுள்ள புத்திசாலிக் குழந்தைகள் நாள் முழுவதும் நோட் செய்வார்கள். நாம் எந்த தவறையும் செய்யவில்லையே? இந்த வேலை ஒரு பொழுதும் செய்ய மாட்டோம் என்ற நினைவு இருப்பதற்காக பக்தி மார்க்கத்தில் கூட தங்களையே தாங்கள் அடித்துக் கொள்வார்கள் அதே போல இங்கேயும்

பரிசோதனை செய்யுங்கள். எங்காவது கண்கள் ஏமாற்றியது என்றால், தங்களுக்கு தாங்களே தண்டனை கொடுங்கள். ஒதுங்கிப் போய் விட வேண்டும். நின்று விட்டு பார்த்துக் கொண்டிருக்கக் கூடாது. சந்நியாசிகள் பெரும்பாலும் கண்களை மூடிக் கொண்டு அமருகிறார்கள். பெண்களைப் பார்ப்பதே இல்லை. அங்கு ஆண்களை முன்னாலும் பெண்களைப் பின்னாலும் அமர்த்துகிறார்கள். இங்கு கூட குழந்தைகளாகிய நீங்கள் உழைப்பு செய்ய வேண்டும். உலக இராஜ்யத்தைப் பெறுவது ஒன்றும் சித்தி வீடு கிடையாது. இப்பொழுது குழந்தைகளாகிய நீங்கள் சங்கமயுகத்தில் இருக்கிறீர்கள். சங்கமம் என்ற வார்த்தையுடன் கூடவே புருஷோத்தமம் என்ற வார்த்தையை அவசியம் எழுதுங்கள். அப்பொழுது யாருக்கும் புரிய வைப்பது எளிதாக இருக்கும். புருஷோத்தம சங்கமயுகத்தில் நீங்கள் மனிதனிலிருந்து தேவதையாக ஆகிறீர்கள். மனிதனிலிருந்து தேவதையாக ஆக்கினார்.. .என்று பாடல் உள்ளது அல்லவா? எந்த மனிதர்கள்? கலியுக மனிதர்கள். தேவதைகள் சத்யுகத்தில் இருப்பார்கள். எனவே கலியுக மனிதர்களை தேவதையாக, நரகவாசிகளை சொர்க்கவாசியாக ஆக்குவதற்காகத் தான் தந்தை வருகிறார். இதைக் கூட நீங்கள் இப்பொழுது தான் அறிந்துள்ளீர்கள். மனிதர்கள் கோரமான இருளில் உள்ளார்கள். நிறைய பேர் சொர்க்கத்தை ஒரு பொழுதும் பார்க்கக் கூட முடியாமல் இருப்பார்கள். உங்களுடைய இந்த தர்மம் சுகம் அளிக்கக் கூடியதாகும் என்று தந்தை கூறுகிறார். ஹெவென்லி காட் ஃபாதர் என்றும் பாடுகிறார்கள். ஆனால் அவர் ஹெவென் சொர்க்கத்தை ஸ்தாபனை செய்தார் என்பதை அறியாமல் இருக்கிறார்கள். மற்ற தர்மத்தினரும் கூட ஹெவென்லி காட் ஃபாதர் என்று கூறுகிறார்கள். ஆனால் (ஹெவென்) சொர்க்கத்தில் தங்களுக்கு பாகம் கிடையாது என்பது அவர்களுக்குத் தெரியாது. கிறித்தவர்கள் பேரடைஸ் (சொர்க்கம்) இருந்தது என்று கூறுகிறார்கள். இந்த தேவி தேவதைகளுக்கு பகவான், பகவதி என்று கூறுகிறார்கள். ஆனால் நிச்சயம் இறை தந்தை அவர்களை பகவான், பகவதி ஆக ஆக்கி இருக்க வேண்டும் என்பதைப் புரியாமல் உள்ளார்கள். உங்களைத் தந்தை இப்பொழுது இது போல ஆக்கிக் கொண்டிருக்கிறார். எனவே நீங்கள் முயற்சி செய்ய வேண்டும். என்னை எந்த ஒரு கர்ம இந்திரியம் ஏமாற்றுகிறது என்று உங்களை நீங்களே தினமும் கேளுங்கள். நாக்கும் கூட குறைந்தது அல்ல. நல்ல பொருளைப் பார்த்தார்கள் என்றால், இதை சாப்பிடலாம் என்று மனதில் தோன்றும். இதற்கு முன்பு குழந்தைகளாகிய உங்களுடைய கோர்ட் (நியாய ஸ்தலம்) நடந்து கொண்டிருந்தது. செய்த தவறுகளை அப்பொழுது கூறுவார்கள். சிவபாபாவின் யக்ஞத்திலிருந்து ஏதாவது பொருளை திருடுவது மிகவும் மோசமான காரியமாகும். ஆனால் மாயை நிறைய பேரை மூக்கை பிடிக்கிறது. எனவே குழந்தைகள் தீய பழக்கங்களை நீக்கி விட வேண்டும் என்று தந்தை கூறுகிறார். இல்லை யென்றால் உயர்ந்த பதவியை அடைய முடியாது. சொர்க்கத்தில் வருவார்கள் தான். ஆனால் இராஜா எங்கே, பிரஜை எங்கே? பிரஜைகளில் கூட ஏழை செல்வந்தர் என்று இருப்பார்கள். எனவே கர்ம இந்திரியங்கள் மீது மிகுந்த கவனம் செலுத்த வேண்டும். கணக்கு வைக்க வேண்டும் - இது கூட வியாபாரமாகும் அல்லவா? யாராவது ஒருவர் தான் இந்த வியாபாரத்தைச் செய்ய முடியும். குழந்தைகளே, என்னிடம் வியாபாரம் செய்ய வேண்டும். உயர்ந்த பதவி அடைய வேண்டு மென்றால் டைரக்ஷன்படி (உத்தரவு) நடங்கள் என்று தந்தை புரிய வைக்கிறார். மாயை உங்களை அவசியம் மறக்குமாறு செய்து விடும். தந்தையின் வழிப்படி நடக்கவில்லை என்றால், பின்னால்

எல்லாமே சாட்சாத்காரம் (காட்சி தெரிதல்) ஆகும். பிறகு நீங்கள் மிகவுமே பச்சாதாபப்படுவீர்கள். இப்பொழுது எல்லோருமே நாங்கள் நரனிலிருந்து நாராயணர் ஆகிடுவோம் என்று கூறுவார்கள். ஆனால் தங்களைத் தாங்களே கேட்டுக் கொண்டு இருங்கள். பாபாவின் உத்தரவை அமலுக்கு கொண்டு வாருங்கள். அப்பொழுது நிறைய முன்னேற்றம் ஏற்படும். நாள் முழுவதின் கணக்கை எடுத்துப் பாருங்கள். கண்கள் ஒன்றும் ஏமாற்றி விடவில்லையே? குறிக்கோள் மிகவும் உயர்ந்தது ஆகும். எனவே 8 இரத்தினங்கள் தான் பாஸ் வித் ஆனாராக வெளிப்படுகிறார்கள். நவரத்தினங்கள் கூட இருக்கிறது. ஆனால் அதில் நம்பர் ஒன் பாபா ஆவார். மற்றது இரத்தினங்கள். எப்பொழுதாவது கிரகச்சாரம் ஏற்படும் பொழுது 8 இரத்தினங்களின் மோதிரத்தை அணிகிறார்கள். எனவே பாஸ் வித் ஆனர் 8 பேர் தான் வெளிப்படுகிறார்கள். மற்றவர்கள் மீது கொஞ்சம் மாசு படிந்திருக்கும். இதில் மிகுந்த உழைப்பு உள்ளது. இராவண இராஜ்யம் ஆகும் அல்லவா? சத்யுகத்தில் இந்த விஷயங்களே இருப்பதில்லை. ஏனெனில் இராவண இராஜ்யம் இல்லை. உயர்ந்த பதவியை அளிப்பதற்காக பகவான் உங்களுக்கு கற்பிக்கிறார். சிந்தித்துப் பாருங்கள். குருக்களிடம் கூட செல்கிறார்கள் அல்லவா? இவர் சத்குரு ஆவார். அவர்கள் சர்வவியாபி (எங்கும் நிறைந்தவர்) என்று கூறி தந்தையிடமிருந்து முகத்தைத் திருப்புமாறு செய்துள்ளார்கள். என் ஒருவனை நினைவு செய்யுங்கள் என்று தந்தை கூறுகிறார் என்பதை நீங்கள் புரிய வைக்கலாம். நான் பதீத பாவனன் ஆவேன். பிறகு நீங்கள் கல், மண் ஆகியவற்றில் இருக்கிறார் என்று கூறுகிறீர்கள். குழந்தை களாகிய உங்களிடம் தீய பார்வை, கோபம் ஆகிய எதுவும் இருக்கக் கூடாது. தங்களுக்கே தீமை ஏற்படுத்தி கொள்கிறார்கள். தீய பார்வை இருக்கிறது என்றால், அதனுடைய வைப்ரேஷன் – அதிர்வலைகள் கூட வருகின்றது. மற்றவர்களுக்கும் கவர்ச்சி ஏற்படுகிறது. பாபா அடிக்கடி குழந்தைகளுடைய கவனத்தை ஈர்க்கிறார். குழந்தைகளே! எந்தவொரு கர்ம இந்திரியத்திற்கும் வசப்பட்டு விகர்மம் ஒன்றும் செய்ய வில்லையே என்று உங்களையே பாருங்கள். இது விக்கிரம நூற்றாண்டு. முதலில் இருந்தது விகர்மா ஜித் - விகர்மங்களை வென்ற நூற்றாண்டு என்றும், பிறகு விகர்மங்கள் செய்ய ஆரம்பிக்கும் பொழுது விகர்ம நூற்றாண்டு என்றும் ஆகிறது. இப்பொழுது தந்தை குழந்தைகளுக்கு கர்மம், அகர்மம், விகர்மத்தின் கதி பற்றி புரிய வைக்கிறார். கர்மம் செய்யவே வேண்டி இருக்கிறது. சத்யுகத்தில் உங்களுடைய கர்மம் அகர்மம் ஆகிறது. இந்த எல்லா விஷயங்களையும் நீங்கள் இப்பொழுது அறிந்துள்ளீர்கள். மற்றவர்கள் முற்றிலும் கோரமான இருளில் இருக்கிறார்கள். உங்களுக்கு இப்பொழுது ஞானத்தின் மூன்றாவது கண் கிடைக்கிறது. திரிநேத்ரி, திரிகால தரிசியாக ஆக்குபவர் ஒரே ஒரு தந்தை ஆவார். இந்த நாடகத்தின் இரகசியத்தை யாருமே முற்றிலுமே அறியாமல் இருக்கிறார்கள். நீங்கள் மூலவதனம், சூட்சுமவதனம், ஸ்தூல வதனம் அனைத்தையும் அறிந்துள்ளீர்கள். பாதி காலத்திற்குப் பிறகு மற்ற தர்மத்தினர் வருகிறார்கள். பின் விருத்தி அடைகிறார்கள். அவர்களை குரு என்று கூற மாட்டார்கள். குரு ஒருவரைத் தவிர வேறு யாரும் கிடையாது. அதாவது சத்கதி செய்பவர் ஒரே ஒருவர் ஆவார். இப்பொழுது அனைவருக்கும் சத்கதி ஆகப் போகிறது. அவர்களுக்கு தர்ம ஸ்தாபகர்கள் என்று கூறப்படுகிறது. குருமார்கள் என்று கூறப்படு வதில்லை. ஆக அவர்களை நினைவு செய்வதால் ஒன்றும் சத்கதி கிடைக்க போவதில்லை. விகர்மங்களும் விநாசமாகாது. அதற்கு கூட பக்தி என்று கூறப்படுகிறது. ஞானத்தின் வரிசையில் நீங்கள் மட்டுமே உள்ளீர்கள். இது பாண்டவ

சேனையாகும். நீங்கள் அனைவரும் சாந்திதாமம் மற்றும் சுகதாமத்திற்கு அழைத்து செல்லக் கூடிய பண்டாக்கள் - வழிகாட்டிகள் ஆவீர்கள். நாம் கைடுகள் - வழிகாட்டிகள் ஆவோம் என்பது உங்களுடைய புத்தியில் உள்ளது. பாபா லிபரேட்டர் (விடுவிப்பவர்) மற்றும் கைடு (வழிகாட்டி) ஆவார். ஒவ்வொருவரையும் விடுவிக்கிறார். என்னை நினைவு செய்தீர்கள் என்றால், விகர்மங்கள் விநாசமாகும் என்று பாபா கூறுகிறார். பிறகு யாராவது விகர்மம் செய்தார்கள் என்றால், நூறு மடங்கு தண்டனையாகி விடுகிறது. எனவே கூடுமானவரை அவப்பெயர் ஏற்படும் வகையில் விகர்மங்கள் செய்யாதீர்கள். விகர்மங்கள் செய்வதால் பின்னர் விருத்தியாகி விடும். எனவே இப்பொழுது மிகவும் எச்சரிக்கை யோடிருங்கள். சகோதரன் சகோதரி என்ற பார்வை மிகவும் பக்குவமாக இருக்க வேண்டும். நாம் பிரம்மாவின் குழந்தைகள். சிவனின் பேரன்கள் ஆவோம். சிவபாபாவிடம் நாம் வாக்குறுதி அளித்துள்ளோம். பிறகும் மாயை மிகவும் ஏமாற்றி விடுகிறது. நாம் இலட்சுமி நாராயணர் ஆகிடுவோம் என்று கூறுவது மிகவும் சுலபம். ஆனால் டைரக்ஷன்படி அமலுக்கு எடுத்து வர வேண்டும். கணவன் மனைவி நாள் முழுவதும் இந்த ஞான விஷயங்களை தங்களுக்குள் உரையாடிக் கொண்டே இருக்க வேண்டும். நாங்கள் பாபாவிடமிருந்து முழு ஆஸ்தியை எடுப்போம் என்று இருவரும் கூறுகிறார்கள். ஆசிரியரிடம் முழுமையாக படிப்போம். அட, இப்பேர்ப்பட்ட ஆசிரியர் பின் எப்பொழுதாவது கிடைப்பாரா என்ன? இதை நீங்கள் மட்டும் தான் அறிந்துள்ளீர்கள். தேவதைகள் கூட தந்தையை அறியாமல் இருக்கிறார்கள் என்றால், மற்ற தர்மத்தினர் எப்படி அறிந்து கொள்ள முடியும்? இப்பொழுது உங்களுக்கு பாபா முழு படைப்பின் முதல் இடை கடை பற்றிய ஞானத்தைக் கூறிக் கொண்டிருக்கிறார். இந்த ஞானம் பிறகு மறைந்து போய் விடும். நானே மறைந்து போய் விடுகிறேன். பின் இந்த ஞானம் எங்கிருந்து கிடைக்கும். பாபா குழந்தைகளுக்கு யுக்திகள் (வழிமுறைகள்) கூறுகிறார் - நமக்கு சிவபாபா கூறுகிறார் என்பதை எப்பொழுதும் நினைவில் கொள்ளுங்கள். நானும் சிவபாபாவிடமிருந்து ஆஸ்தியை எடுத்துக் கொண்டிருக்கிறேன் என்பதை இவர் அறிந்துள்ளார். இவரும் மாணவ வாழ்க்கையில் இருக்கிறார். நீங்களும் மனிதனிலிருந்து தேவதை ஆவதற்காக படித்துக் கொண்டிருக்கிறீர்கள். தேவதைகள் சத்யுகத்தில் இருப்பார்கள். கலியுகத்தில் மனிதர்கள் இருக்கிறார்கள். அதில் அநேக தர்மங்கள் உள்ளன. இவை மிகவுமே புரிந்து கொள்ள வேண்டிய விஷயங்கள் ஆகும். இங்கு நிறைய பேர் வருகிறார்கள். பிறகும் அதிர்ஷ்டத்தில் இல்லையென்றால், எங்களுக்கு சந்தேகம் வருகிறது. சிவபாபா இவருக்குள் எப்படி வந்து கற்பிக்கிறார் என்று கூறுகிறார்கள். நான் இதை அறிந்து கொள்ள முடியவில்லை. அட சிவபாபா வரவில்லை என்றால், உங்கள் விகர்மம் விநாசமாகும் வகையில் சிவபாபாவை எப்படி நினைவு செய்வீர்கள்? அவருடைய நினைவு இல்லாமல் விகர்மங்கள் விநாசம் ஆக முடியாது. நிறைய தண்டனைகள் வாங்க வேண்டி வரும். மற்றது ஒரு பைசாவின் பதவி கிடைக்கும். இங்கு இராஜதானி அமைந்து கொண்டிருக்கிறது. இராஜாக்களுக்கு முன்னால் தாச சாசிகள் கூட இருப்பார்கள் அல்லவா? நமது சரீரம் இப்பொழுது விடுபட்டு விட்டால் நாம் போய் என்னவாக ஆகக் போகிறோம் என்று பாபாவிடம் கேட்டீர்கள் என்றால், பாபா எல்லாமே கூறி விடுவார். வரிசைக்கிரமமாக உள்ளார்கள் அல்லவா? இந்த படிப்பு மிகவுமே வலிமையானது. இதில் நிறைய சம்பாத்தியம் உள்ளது. மனிதர்கள் சம்பாத்தியத்திற்காக எவ்வளவு களைப்படைகிறார்கள். இரவு பகலாக புத்தி

அதிலேயே ஈடுபட்டிருக்கும். ஒப்பந்தம் செய்துக் கொண்டே இருப்பார்கள். உங்களிடம் கூட பெரிய வியாபாரிகள் வருகிறார்கள். என்ன செய்வது நேரம் இல்லை என்பார்கள். அட, உலக அரசாட்சி கிடைக்கிறது - சிவபாபாவை நினைவு மட்டும் செய்ய வேண்டும். தங்கள் இஷ்ட தேவதையைக் கூட நினைவு செய்கிறீர்கள் இல்லையா? எந்த ஒரு தேவதையை நினைவு செய்வதால் விகர்மங்கள் விநாசம் ஆகாது. எனவே பாபா திரும்பத் திரும்ப புரிய வைத்துக் கொண்டே இருக்கிறார். ஏனெனில், எங்களுக்கு யாருமே புரிய வைக்கவில்லை என்று யாருமே கூறக் கூடாது. குழந்தைகளாகிய நீங்கள் ஒவ்வொருவருக்கும் செய்தி அளிக்க வேண்டும். ஆகாய விமானத்திலிருந்து துண்டு பிரசுரங்களைப் போடுவது கூட மிகவும் நல்லது. பாபா வந்திருக்கிறார் என்பது எங்களுக்கு தெரியவே இல்லை என்று யாராவது கூறும் வகையில் யாருமே இருந்து விடக் கூடாது. எனவே இவை எல்லாமே செய்ய வேண்டி உள்ளது.

பிரம்மா சிவனின் முதல் குழந்தை ஆவார். பிரஜாபிதா பிரம்மாவும் தந்தை ஆகிறார் அல்லவா? பிரம்மா மூலமாக சிவபாபா சொர்க்கத்தை ஸ்தாபனை செய்கிறார். நான் இவர் மூலமாக ஆதி சனாதன தர்மத்தின் ஸ்தாபனை செய்து கொண்டிருக்கிறேன் என்று பாபா கூறுகிறார். வரப்போகின்ற விநாசத்திற்கு பிறகு உலகத்தில் சுகம் சாந்தி தூய்மை நிலவும். கல்ப கல்பமாக இது போல சொர்க்கத்தின் ஸ்தாபனை ஆகிறது. எப்பொழுதும் பாபா பாபா என்று கூறிக் கொண்டே இருங்கள். பாபா என்று கூறும் பொழுதே கண்களிலிருந்து அன்புக் கண்ணீர் வர வேண்டும். பாபா உங்களை எப்பொழுது சந்திப்போம்? ஆனால் முன்னால் அமர்ந்திருப்பவர்கள். ஏற்று கொள்வ தில்லை. மேலும் பார்க்காமல் இருப்பவர்கள் துடிக்கிறார்கள். அதிசயம் ஆகும். பந்தனத்திலிருந்து விடுவியுங்கள் என்று எழுதுகிறார்கள். ஒரு சிலர் பாபாவினுடையவர் ஆகி, பிறகு மாயை யினுடையவராக ஆகி விடுகிறார்கள். பிறகு கடைசியில் நினைவிற்கு வரும். இறக்கும் நேரத்தில் ராம் ராம் என்று கூறுங்கள் என்று எல்லோருக்கும் கூறுகிறார்கள். கடைசியில் கவர்ச்சி ஏற்படும். பாபாவின் நினைவினால் நாம் விகர்மங்களை விநாசம் செய்வோம் என்று புரிந்து விடுவார்கள். இனிமையிலும் இனிமையான குழந்தைகளே! தங்களுக்கு நன்மை செய்யுங்கள் என்று பாபா கூறுகிறார். தந்தையின் ஸ்ரீமத்படி நடங்கள். எல்லோருக்கும் செய்தி கொடுத்துக் கொண்டே இருங்கள். விமானத்தின் மூலமாக யாரோ ஒருவருக்குத் துண்டு பிரசுரம் கிடைத்தது. ஆக அவர் விழித்து கொண்டு விட்டார் (சரித்திரம் கூறுதல்). முழு உலகத்தில் குறிப்பாக பாரதத்தில் சுகம் சாந்தி ஸ்தாபனை ஆகவே வேண்டி உள்ளது. நல்லது.

இனிமையிலும் இனிமையான காணாமல் போய் வெகுகாலம் கழித்து கண்டெடுக்கப்பட்ட செல்லமான குழந்தைகளுக்கு, தாயும் தந்தையுமாகிய பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் காலை வணக்கம். ஆன்மீகக் குழந்தைகளுக்கு, ஆன்மீகத் தந்தையின் நமஸ்காரம்.

தாரணைக்கான முக்கிய சாரம்:

1. சகோதர சகோதரி அல்லது சகோதர சகோதரர் என்ற பார்வையை பக்குவப்படுத்த வேண்டும். மிகவும் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும். தந்தைக்கு அவப்பெயர் ஏற்படும் வகையில் அப்பேர்ப்பட்ட எந்த கர்மமும் செய்யக் கூடாது.

2. தந்தையிடம் ஒரு பொழுதும் சந்தேகம் எழக் கூடாது. அன்புடன் தந்தையை நினைவு செய்ய வேண்டும். இரவு பகலாக படிப்பின் மீது கவனம் வைத்து சம்பாத்தியத்தை சேமிப்பு செய்ய வேண்டும்.

வரதானம் : சதா வெற்றி என்ற நினைவினால் மகிழ்ச்சியாக இருக்கக்கூடிய மற்றும் அனைவருக்கும் மகிழ்ச்சி கொடுக்கக்கூடிய கவர்ச்சிக்கக் கூடிய மூர்த்தி ஆகுக.

நான் கல்ப கல்பமாக வெற்றி அடைந்த ஆத்மா, வெற்றித் திலகம் நெற்றியில் சதா ஜொலித்துக் கொண்டே இருக்க வேண்டும். இந்த வெற்றித் திலகமானது பிறருக்கும் மகிழ்ச்சியைக் கொடுக்கும். ஏனென்றால், வெற்றியாளராக இருக்கும் ஆத்மாவின் முகம் எப்பொழுதுமே மகிழ்ச்சியாக இருக்கும். மகிழ்ச்சியான முகத்தைப் பார்த்து, அந்த மகிழ்ச்சிக்குப் பின்னால், தானாகவே அனைவரும் கவர்ச்சிக்கப்படுவார்கள். இறுதி நேரத்தில் கேட்பதற்கான சமயம் யாரிடமும் இருக்காது, அப்பொழுது உங்களுடைய கவர்ச்சிக்கக்கூடிய தோற்றம் (மூர்த்தி) மகிழ்ச்சியான முகமே அனேக ஆத்மாக்களுக்கு சேவை செய்யும்.

சுலோகன்: அவ்யக்த ஸ்திதியின் ஒளியை நாலாபுறங்களிலும் பரப்புவது தான் லைட் ஹவுஸ் (கலங்கரை விளக்கம்) ஆவதாகும்.